தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# விடுதலைப்பயணத்தில் தோழர் ஜீவா

**க.கலைப்பொன்னி,** முனைவர்பட்டஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தூயவளனார் தன்னாட்சிக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி -02

**ஆய்வுச்சுருக்கம்**

இந்திய விடுதலைப் போர் ஒரு சகாப்தம். இந்த சகாப்தத்தை உருவாக்கத் தங்கள் இன்னுயிரை ஈந்து சுதந்திர காற்றைச் சுவாசிக்கச் செய்த விடுதலைப் போராட்ட தியாகிகளுள் முதன்மையானவர்கள் தமிழர்கள். இந்திய விடுதலைப்போரில் வீரதீரத்துடன் பங்கேற்ற வீர மறவர்களின் தியாகத்தின் காரணமாகப் பேரின்ப சுதந்திரத்தை இந்திய தேசம் அடைந்தது. இந்திய சுதந்திர வரலாற்றில் தமிழர் தம் பங்களிப்பு போற்றத்தக்கதாகும்.

பிரிட்டிஷ் அடிமைத்தனத்திற்கு எதிரான சிந்தனைகளை இளமைப்பருவத்தில் பெற்ற தோழர் ஜீவா விடுதலைக் கவிதைகளை இயற்றவும் நாடகங்களில் நடிக்கவும் கூடிய திறன் பொருந்தியவராக இருந்தார். காந்தியின் கொள்கைகள் மீதும் ஈர்ப்பு கொண்ட அவர் விடுதலைப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோடு தான் கொண்ட கொள்கையில் உறுதியாகவும் இருந்தார். தீண்டாமைக்கு எதிராகப் போராடிய இவர் பெண்ணுரிமைக்காகவும் தொழிலாளர்களின் எழுச்சிக்காகவும் பல்வேறு களங்களில் நின்று போராடியுள்ளார். காந்தியத்தின் மீதான ஈர்ப்பும் பிற விடுதலைப் போராட்ட வீரர்களுடனான தொடர்பும் இவரைப் பல போர்க்களங்களில் நின்று போராடத் தூண்டின. தன்னை ஒரு அரசியல்வாதியாக அடையாளப்படுத்திக் கொள்வதை விட, தொழிலாளர் தலைவராக அடையாளப்படுத்திக் கொள்வதையே விரும்பினார். பொதுமேடைகளில்; தன்னுடைய வீரியமிக்கச் சொற்பொழிவால் விடுதலைக்கருத்துக்களை எடுத்துரைத்த சிறந்த பேச்சாளராகிய இவர் தமிழுக்கும் பல்வேறு இலக்கியக் கொடைகளை வழங்கியுள்ளார். இவ்வாறு விடுதலைப்

போராட்டத்திலும் மக்களின் உரிமைப்போராட்டத்திலும் தன்னை இணைத்துக் கொண்ட பொதுவுடைமைப் போராளி ஜீவானந்தம் என்ற தோழர் ஜீவா அவர்களின் பங்கினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுசொற்கள்**

கைராட்டினம், சாஸ்திரம், பொதுவுடைமைப் போராளி, சோசலிசம், நாட்டுடமை.

**முன்னுரை**

சுதந்திரம் என்பது சுயமாகக் கிடைத்ததில்லை. இன்று ஒவ்வொருவரும் சுதந்திர காற்றைச் சுவாசிக்கப் பல போராளிகள் தங்களையும் தங்கள் வாழ்நாளையும் தியாகம் செய்துள்ளனர். “தண்ணீர் விட்டோ வளர்த்தோம், கண்ணீரால் இப்பயிரைக் காத்தோம்” என்ற அடிகள் இந்த சுதந்திரம் கிடைக்க இந்த தேசம் எவ்வளவு பாடுபட்டிருக்கிறது என்பதைப் புலப்படுத்துகின்றன. இந்தியர்கள் சுவாசிக்கும் சுதந்திர காற்றில் முன்னோர்களின் தியாகம் கலந்திருக்கிறது. குருதியாலும் தியாகத்தாலும் கிடைத்திருக்கிறது. இந்திய சுதந்திர வரலாற்றில் வாழ்வாங்கு வையத்துள் வாழ்ந்த தமிழர்களின் பங்களிப்பு தலையாயதும் தவிர்க்கமுடியாததுமாய் உள்ளது. அத்தகைய செங்குருதியில் செதுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜீவாவின் விடுதலைப்பயணத்தைப் பற்றி ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**இளமையில் விடுதலை உணர்வு**

ஜீவானந்தம் 1907 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் தேதி பூதப்பாண்டி என்ற சிற்றூரில் பிறந்நதார். இவரது பெற்றோர் பட்டத்தார் பிள்ளை, உமையம்மை ஆவார். குடும்பத்தில் நான்காவது பிள்ளையாகப் பிறந்த இவர் ஒரு நடுத்தர ஆங்கிலப் பள்ளியில் பயின்றார். நாகர்கோவிலில் உள்ள கோட்டாறு உயர்நிலைப்பள்ளியில் தலைசிறந்த மாணவராக விளங்கினார். கணக்கு அவருக்கு இனிப்பு போன்று இருந்தது. படிப்பைப் போலவே விளையாட்டிலும் ஆர்வம் உள்ளவராக இருந்தார். பிற்காலத்தில் இலக்கியத்திலும் அரசியலிலும் தன்னை முழுமையாய் ஈடுபடுத்திக் கொண்ட ஜீவா சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார்;. அவர் எழுதிய முதல் பாட்டு

காந்தியையும் கைராட்டினத்தையும் பற்றியது ஆகும். இரண்டாவது பாட்டின் பல்லவி பின்வருமாறு

“திடமுடனிடர் கெடவுட
னுடையணிந்திடவே–திருவுடனே
கதரணிந்திடவே” (எஸ். இஸ்மத் பாஷா (1946) ப.7 )

என்று காந்திஜி, கதர், கைராட்டு பற்றிப் பல பாடல்கள் அவரால் பாடப்பட்டுள்ளன.

சிறுவயதிலேயே காந்தியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட ஜீவா ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போதே கவிதைகளும் நாடகங்களும் எழுதி நடிக்கவும் செய்தார். குடியரசு, ஜனசக்தி, பகுத்தறிவு, புரட்சி தாமரை ஆகிய இதழ்களில் புரட்சிகரமான கட்டுரைகளையும், கவிதைகளையும் படைத்தார். தான் கற்ற பள்ளி இருந்த நாகர்கோவிலில் ஜீவா அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். தேசத்தொண்டில் ஈடுபட்டுப் பல துன்பங்களைச் சமாளிக்கும் ஒருவனை கதாநாயகனாக அமைத்து சுகுணராஜ அல்லது சுதந்திர வீரன் என்ற நாவலை எழுதினார்.

இந்திய தேசத்தில் புதியதோர் சக்தி தோன்றியது. மகாத்மாகாந்தியின் ஒத்துழையாமை இயக்கப் பிரசாரம் நாட்டைத் தட்டி எழுப்பியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தது. மத்திய கிழக்கு நாடுகளில் முஸ்லீம் மக்களுக்கு ஏகாதிபத்யம் இழைத்த தீங்குகளைக் கண்டு ஒவ்வொரு முஸ்லீமுக்கும் கோபம் அத்துமீறி வந்தது. அடக்குமுறை தர்பாரை நடத்திய அதிகார வர்க்கத்தை எதிர்த்து ஒவ்வொருவருக்கும் ஆவேசம் ஏற்பட்டது.

சிறுவன் ஜீவானந்தம் இதற்கு விதிவிலக்கல்ல. இந்திய மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டக் காந்தி முயற்சி எடுத்துக் கொண்டார். இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஐக்கியப்படுத்த சுயராஜ்ஜியத்தையும், கிலாபத்தையும் ஒன்றாக இணைத்தார். தீண்டப்படாதவர் என்று ஒதுக்கப்பட்ட மக்களையும் மற்றவர்களுடன் சமநிலைக்குக் கொண்டு வருவதற்காகத் தீண்டாமை ஒழிப்பை தன் நிர்மாணத்திட்டத்தில் சேர்த்தார். ஜனங்களின் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக சுயசேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் கதர் திட்டத்தையும் வெளியிட்டார்.

இவை அனைத்தும் இளைஞன் ஜீவாவின் உள்ளத்தில் மின்சார சக்திபோல பாய்ந்தன. பசுமரத்தாணி போல் பதிந்தன. பள்ளிக்கூடத்திலும் ஊர் ஜனங்களிடமும் இதைப் பற்றிப் பேச முற்பட்டார். தன் சொந்த ஊரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காந்தி பஜனை நடத்தி காங்கிரஸ் பிரசாரம் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டார்.

**கொள்கைப்பிடிப்பு**

எல்லோரும் சமம், எல்லோரும் நிகர், எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்று கருதுகின்ற துடிப்புமிக்க இளைஞனாக ஜீவா விளங்கினார். உயர்நிலைப் பள்ளியில் கடைசி வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது தேசத்தொண்டு செய்வதை விட்டு விட்டுப் பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்திருப்பதாவது என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டிருந்தார். அவரது கொள்கைப் பிடிப்பு இறுக்கிக் கொண்டே வந்தது. அவரைப் புரட்சிப்பாதையில்; தள்ளிற்று.

நாகர்கோயிலில் உள்ள கோட்டாறு உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த சமயம் தன்னுடன் பயிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவன் மாணிக்கத்தடன் மிகுந்த நட்பு கொண்டிருந்தான். அது தீண்டாமை சக்தி ஊறியிருந்த காலம் என்பதால் ஆலயப் பிரவேச உரிமை தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு மறுக்கப்பட்டு இருந்தது.

இதை உணர்ந்திருந்த ஜீவா தன் நண்பனைத் தீண்டாமை தாண்டவமாடிய உயர் சாதியினர் வசிக்கும் தெரு வழியாக, அங்குள்ள கோயிலுக்கு அழைத்துச் சென்றான். இதை அறிந்த ஆதிக்கச்சாதியினர் ஜீவாவை அழைத்து விசாரித்தனர். அவரைக் கடிந்துகொண்டதோடு, மிரட்டவும் செய்தனர். ஆனால் ஜீவா எதற்கும் அஞ்சுவது இல்லை. அதனால் அவர் தாக்கப்பட்டார். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாணவன் கோயிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டதால் ஜீவாவின் தந்தைக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இதில் கோபமுற்ற தந்தை ஜீவாவை கடுமையாகத் தண்டித்தார். "தீண்டாமையை ஒழித்துத்தான் தீருவேன் என்றார் ஜீவா. கூடாது என்றார் தந்தை. என் கொள்கையை விட முடியாது. வீட்டை விட்டு வெளியேறுகிறேன் என்று கூறி வீடு வாசல்களைத் துறந்து ஜீவா வெளியேறி விட்டார்."(எஸ்.இஸ்மத்பாஷா (1946), ப.11 ) இந்தக் கொள்கைப் பிடிப்பு அவரிடம் இருந்த உயரிய குணங்களில் ஒன்றாகும்

கதர்ப்பிரச்சாரம், தீண்டாமை எதிப்பு என்று காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றி வந்தார். அவரது தாயார் இறந்த போது அவர் தான் கோடித்துணி கட்டிக்கொண்டு, ஈமச்சடங்கு செய்ய வேண்டும் என்றார்கள். ஆனால் கதர் உடுத்துகின்ற அவரோ, கோடியாகக் கதர்த்துணி வந்தால் தான் ஆயிற்று என்று பிடிவாதமாய் நின்றார். கதர்த்துணி கிடைக்காத காரணத்தால் அவருடைய தம்பிதான் அவருக்குப் பதில் ஈமச்சடங்கு செய்;ய வேண்டியதாயிற்று.

கொள்கைக்காக வீட்டை விட்டு வெளியேறிய ஜீவா சுசீந்திரம் என்ற ஊருக்குச் சென்றார். அங்குத் தெருப்பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கும் நிலையில் இருந்தது. ஜீவா அந்தப் போராட்டத்தில் குதித்தார்.

“நாமிருக்கும் நாடுநம தென்பதறிந்தோம் - இது

நமக்கே யுரிமையா மென்பதறிந்தோம் - இந்தப்

பூமியி லெவர்க்குமினி அடிமை செய்யோம்” (வீ.வீ.கே. சுப்புராசு(2016) ப.187)

என்று முழங்கி மூலையில் முடங்கி கிடந்த மக்களைத் தட்டியெழுப்பினார் தேசியக்கவி பாரதியார். பாரதியின் பாதையைப் பின்பற்றிப் பாமரர்களையும் எழுச்சி பெறச் செய்வதற்காகப் பல்வேறு பாடல்களையும் பாடியுள்ளார் ஜீவா. ‘வழி விடுவீர் வழி விடுவீர்’ என்று அவரால் ஆக்கப்பட்டு சத்தியாக்கிரகத் தொண்டர்களால் பாடப்பட்ட பாட்டு அப்போது வீடுகளிலெல்லாம் எதிரொலித்தது.

**தீண்டாமை எதிர்ப்பு**

படைப்பு எல்லாம் கடவுளுடையது என்றால் தாழ்ந்த சாதிக்காரர்கள் ஏன் கோயிலுக்குள் நுழையக்கூடாது? உலகில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு சூரியன், உயர்ந்த சாதியினருக்கு ஒரு சூரியன் உதிக்கிறது என்றார் ஜீவா. வாழ்க்கையில் சுய ஒழுக்கம் தான் ஒருவரின் உயர்வு தாழ்வை நிர்ணயிக்க வேண்டுமே தவிர, பிறந்த குலம் சாதி அல்ல என்று கூறினார்.

பிரபல தேசபக்தரான ஸ்ரீ.வ.வே.சு.ஐயரால் சேரன்மகாதேவியில் ஒரு ஆஸ்ரமம் நடத்தப்பட்டு வந்தது. பரத்வாஜ் ஆஸ்ரமம் என்று அழைக்கப்பட்டது. அங்குப் பிராமண மாணவர்களுக்கு மட்டும் ஒரு தனி இடத்தில் உணவு பரிமாறும் வழக்கம் இருந்தது.

இதனை எதிர்த்து அனைவருக்கும் ஒரே இடத்தில் சமமாக உணவு பறிமாறப்பட வேண்டும் என்று ஈ.வே.ரா, வரதராஜ நாயுடு முதலியோர் கிளர்ச்சி செய்தனர். ஜீவாவும் இந்தக் கிளர்ச்சியிலும் கலந்து கொண்டார். சிறந்த தேசியவாதிகளையும் இந்தக்கொடிய ஜாதி மதப்பேய் விடவில்லையே என்று நினைத்து மிகவும் வருந்தினார். இக்கொடுமையை ஒழிக்கக் கடுமையாகப் போராட வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார்.

“பெரும்பாலும் மதப்படியும் ஜாதி வழக்கப்படியும் நடக்காதவர்களே தான் மதம் என்றும் சாஸ்திரமென்றும் ஜாதி வழக்கம் என்றும் தொல்லைப்படுத்துகிறார்கள்” (கி.வீரமணி (தொகு),(1994), ப.66). தங்களுக்காகக் கொண்டு வந்து போடப்படும் மதத்திற்கும், சாஸ்திரத்திற்கும் கடுகளவு புத்தியுள்ள எந்த மனிதனாவது, மதிப்பு கொடுக்க முடியுமா என்று பாருங்கள் என்று தந்தை பெரியார் கூறியுள்ளார்.

எல்லோரும் சமம் என்ற கருத்தை மக்களிடம் எடுத்துச் செல்வதற்காகக் காரைக்குடிக்கு அருகிலுள்ள சிராவயல் என்ற கிராமத்தில் காந்தி ஆஸ்திரமத்தை தாமே தொடங்கினார். இங்குச் சாதிப்பாகுபாடு, பாலின வேறுபாடு இல்லாமல் அனைவரும் சமமாகவும் நடத்தப்பட்டனர். தேசியக் கல்வி போதிக்கும் பொருட்டுப் பள்ளிக்கூடங்கள் பல தொடங்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் இரவுப் பள்ளிக்கூடங்களும் நூல் நூற்கும் நிலையங்களும் நடத்தப்பட்டன.

மேலும் வைக்கம் என்ற ஊரில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டார். பெரியாரோடு இணைந்து வைக்கம் போராட்டம், சுசீந்திரம் தீண்டாமை எதிர்ப்பு இயக்கம் ஆகியவற்றில் ஈடுபட்டு தீண்டாமைக்கு எதிராகப் போராடினார்.

**பெண் விடுதலைச் சிந்தனைகள்**

வ.உ.சிதம்பரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் ‘பெண்கள் விடுதலை’ என்னும் பொருள் பற்றி வெகுநேரம் உருக்கமாக ஜீவா பேசினார். பெண்குலத்தின் மேன்மையையும் வீரத்தையும், வருணித்த உணர்ச்சியை அலையலையாகப் பெருக்கினார். இது முழுவதையும் கவனமாகக்கேட்டு வந்த வ.உ.சி

தம் முடிவுரையில்,‘வேதம் நிறைந்த தமிழ்நாடு கண்ட கனவு வீண்போகவில்லை’என்று கூறி ஜீவாவை வெகுவாகப் பாராட்டினார்.

“கும்மி, கோலாட்டங்களை ஒழித்து விட்டு ஓடவும், குதிக்கவும், குஸ்தி முதலியவைகளையும் சொல்லிக் கொடுத்து ஒரு ஆண் பிள்ளைக்கு உள்ள பலம், தைரியம், உணர்ச்சி ஆகியவைகள் பெண்களுக்கும் உண்டாகும்படியாகவும் செய்ய வேண்டும்.” (கி.வீரமணி (தொகு) (994), ப.183)என்று பெரியார் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் இருக்க வேண்டும் என்று விரும்பியதை இங்கு ஒப்புநோக்கலாம்

சமூகச் சீர்திருத்தம் செய்வதற்காகவே தோன்றியது சுயமரியாதை இயக்கம் ஆகும். ஜாதிக்கொடுமை, பெண் அடிமை, விதவைக் கொடுமை, மூடப்பழக்கங்கள் முதலியவற்றைச் சமூகத்தில் இருந்து வேரோடு சாய்த்து வீழ்த்தவேண்டுமென்பது இதன் நோக்கம் ஆகும். ஈ.வே.ராமசாமியும் அவரைச் சார்ந்த சிலரும் அந்த இயக்கத்தை வளர்த்துத் தீவிர பிரச்சாரம் செய்தனர்.

“பெண்களுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் பிரியப்படுபவர்கள். அதற்குத் தடையாய் உள்ளதை எதிர்க்கவும், அழிக்கவும் துணிந்தவர்களாய் இருந்தால் தான் அவர்கள் உண்மையான சுதந்திரவாதிகள் ஆவார்களே தவிர, மற்றபடி தடைகளை ஆதரித்துக் கொண்டு சுதந்திரம் பேசுகிறவர்கள் தந்திர வாதிகளே ஆவார்கள் அல்லது மூடர்களே ஆவார்கள்” (மேலது ப.99) என்று பெண்கள் சுதந்திரம் குறித்துப் பெரியார் கூறியுள்ளார். இளமையிலேயே சமூகக் கொடுமைகளை வெறுத்த ஜீவா சுயமரியாதை இயக்கத்திலும் கலந்தார்.

**காந்தி உடனான உறவு**

காந்தியத் தொண்டர், சுயமரியாதை இயக்கப் பற்றாளர், தனித்தமிழ் காதலர், பொதுவுடமைப் போராளி என்று பன்முக அடையாளங்களோடு அறியப்பட்ட தூய அரசியல்வாதி ஜீவா ஆவார். தேசவிடுதலை, சாதிய வேறுபாடுகள், பெண்ணுரிமை, தனித்தமிழ் என்று முற்போக்குக் கருத்துக்களை ஏந்தி நடந்த ஜீவானந்தத்தைக் காந்தி சந்தித்த நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிக்கது ஆகும். தமிழகம் வந்திருந்த காந்தி அவரைக் காரைக்குடியில் தான் தங்கியிருந்த இடத்துக்கு வரச் சொல்லாது ஜீவா செயலாற்றிய காந்திய ஆசிரமத்திற்கே நேரில் சென்று பார்வையிட்டார்.

மகாத்மாகாந்தி இலங்கைக்குப் போகும் போது செட்டிநாட்டிற்கும் பயணம் செய்தார். ஆசிரமவாசிகள் சிலருடன் சென்று காரைக்குடியில் அவரை ஜீவா பேட்டி கண்டார். "உங்களுக்கு ஏதாவது சொத்து இருக்கின்றதா ?" என்று காந்தி, ஜீவாவிடம் கேட்டார். "தாய்நாடு தான் எங்களுடைய சொத்து" என்று ஜீவா பதிலுரைத்தார். "இல்லை, நீங்கள் தான் தாய் நாட்டின் சொத்து" என்று காந்தி கூறினார்." (எஸ். இஸ்மத்பாஷா (1946) ப.18)

பிறகு அந்த ஆசிரமத்திற்குக் காந்திஜி வருகை தந்தார். ஐம்பது ஆயிரம் கஜம் நூல் அவருக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்டது. அதில் பத்தாயிரம் கஜம் நூலை ஜீவா தானே நூற்றுக் கொடுத்தார். இது முடிந்ததும் காந்திஜிக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்து அளிக்கப்பட்டது. அதில் வர்ணாசிர தர்மத்தைக் கண்டித்து ஜீவா எழுதி இருந்தார்.

காந்தியின் சுதந்திர ஆர்வத்தை ஏற்றுக் கொண்ட ஜீவா வருணாசிரதர்மத்தை எதிர்த்தார். ஜீவா காந்தியடிகளுக்கு எழுதிய கடிதத்தில் கீதையின் குணத்தையும் செய்யும் தர்மத்தையும் பொருத்து மனிதர்களை நான்கு வர்ணமாக பிராமணன், சத்ரியன், வைசிகன், சூத்திரன் என்று பிரிப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதே வேளையில் பிராமணன் நெறி தவறிப் போவானேயானால் அவன் வைசிகன் தானே. வைசிகன் நன்னெறியைப் பின்பற்றுவானேயானால் அவன் பிராமணன் தானே என்று ஜீவா கேட்டார்.

"பிராமணம் தவறிழைத்தால் அவன் கெட்ட பிராமணன். வைசிகன் நன்னெறியில் நின்றால் அவன் நல்ல வைசிகன்" என்றார். இந்தப் பதில் தான் ஜீவாவைக் காந்தியத்தை விட்டு விலக வைத்தது. "வைஷ்ணவக் குடும்பத்தில் பிறந்தவன் ஆகையால் நான் அடிக்கடி விஷ்ணு கோவிலுக்குப் போக வேண்டியிருந்தது. ஆனால் அது என் மனதை ஒரு போதும் கவரவில்லை. அதன் பகட்டும் ஆடம்பரமும் எனக்குப் பிடிக்கவே இல்லை."(ரா.வேங்கடராஜீலு, (மொழி),(2004), ப.36 ) என்னும் காந்தியின் கருத்துக்களைக் கேட்டபிறகு ஜீவாவின் உள்ளத்தில் சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள் தீவிரப்படுத்தப்பட்டன. இந்த ஆசிரமத்தின் தலைவரான ஸ்ரீ கும்பலிங்கத்திற்கும் ஜீவாவிற்கும் கருத்து மோதல் முற்றி அந்த ஆசிரமத்தை விட்டு வெளியேறி, நாச்சியாபுரம் என்ற கிராமத்தில் புதிய ஆசிரமம் ஒன்றை நிறுவினார். இதற்கு உண்மை விளக்க

நிலையம் என்று பெயர் கொடுக்கப்பட்டது. சுதந்திர இயக்கமும் சுயமரியாதை இயக்கமும் இந்த நிலையத்தில் தான் ஒன்றாக இணைக்கப்பட்டன.

**விடுதலைப் போராட்ட வீரர்கள் தொடர்பு**

காந்தியின் சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்டு, முதல் முறையாக சிறைக்குச் சென்றார். பகத்சிங் தனது தோழனுக்கு எழுதிய “நான் ஏன் நாத்திகன் ஆனேன்” என்ற கடிதத்தை மொழிபெயர்க்கும் பணியைப் பெரியார் ஜீவாவிற்கு வழங்கினார். அதை மொழி பெயர்த்ததற்காக வெள்ளை அரசாங்கம் ஜீவாவை விலங்கிட்டு அடித்து வீதி வீதியாக அழைத்துச் சென்றது. ஜீவாவைத் திருச்சி சிறையில் அடைத்த பிறகு அவர் முழுக்க முழுக்க சோசலிசக் கொள்கையால் ஈர்க்கப்பட்டார்.

காங்கிரஸ் இயக்கத்தில் செயல்பட்டுக் கொண்டு இருந்த ஜீவா, பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திலும் பங்காற்றி வந்தார். அப்போது தனித்தமிழ் ஆதரவாளரான வேதாச்சலம் (எ) மறைமலையடிகளின் தொடர்பு ஏற்பட்டு அவர்மீது அளவு கடந்த அன்பு செலுத்தத் தொடங்கினார். ஒருமுறை மறைமலையடிகளைத் தேடி அவர் வீட்டிற்குச் சென்றிருந்த போது, அவர் ஆங்கிலத்தில் பேசியதைக் கண்டு, திடுக்கிட்ட ஜீவா வறட்டுத்தமிழ்வாதம் கூடாது என்பதை உணர்ந்தார்.

பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டிருந்த ஜீவா தேச விடுதலைப் போராட்டத்திலும் அதே வேகத்தோடும் வீரியத்தோடும் ஈடுபட்டார். சட்டமறுப்பு இயக்க ஆதரவுக் கூட்டங்களில் ஜீவாவின் கருத்தாழமிக்க பேச்சு மக்கள் மத்தியில் உயிர் பெற்று எழுந்தது. இதைக் கண்டு அஞ்சத் தொடங்கிய அரசு அவர் எங்கும் பேசக்கூடாது என்று வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது. மறுநாள் கோட்டையூரில், தடையை மீறிப் பேசிய ஜீவா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாழ்வின் போது பகத்சிங்கின் தோழர்களான பூதகேஸ்வதத், குந்தலால் ஆகியோரையும் வங்கப் புரட்சியாளர்களான ஜீவன்லால் கோஷ், சட்டர்ஜி ஆகியோரையும் சந்தித்தார். இவர்களுடன் சோசலிசம் கம்யூனிஸம் போன்ற கொள்கைகள் பற்றியும் சோவியத் யூனியன் பற்றியும் கலந்துரையாடுகின்ற சூழல் அவருக்கு ஏற்பட்டது. பொதுவுடைமைப் புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பும் சிறையில் அவருக்குக் கிடைத்தது. இது அவரது உள்ளத்தில் ஊறிக் கொண்டிருந்த பொதுவுடைமைக்

கருத்துக்களுக்கு உரம் சேர்ப்பதாக இருந்தது. 1932 ஜனவரியில் ஒரு காங்கிரஸ்வாதியாகச் சிறை புகுந்த ஜீவா நவம்பரில் ஒரு பொதுவுடைமையாளராகச் சிறையிலிருந்து திரும்பினார்.

**விடுதலைப் போராட்டக் களங்கள்**

ஜீவா பொதுவுடைமையாளராகச் செயல்படுவதற்கு அடிப்படையாக அமைந்த காலச்சூழல் 1935-39 ஆகும். இக்காலங்களில் தான் ‘ஜனசக்தி’ இதழ் உருவாக்கப்பட்டது. தொழிலாளர் பாதுகாப்புக் கழகம் என்னும் பெயரில் பொதுவுடைமையாளர்கள் உருவாக்கிய அமைப்பின் மூலம் பல்வேறு தொழிற்சங்க அமைப்புகள் உருவாயின.

பொதுவுடைமைக் கட்சியில் முக்கிய பதவி வகித்த ஜீவா, சீனப் படையெடுப்பை எதிர்த்துக் கடும் பரப்புரையை மேற்கொண்டார். பொதுவுடைமைக் கட்சியின் தேசியக் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றுவதில் ஜீவா முக்கியப் பங்கேற்றார். பொதுவுடைமைக்கட்சி தடை செய்யப்பட்ட காலங்களில் (1939-42) பம்பாயிலும் சிறையிலும் தனது பெரும் பகுதியான நாள்களை ஜீவா கழித்தார். இக்காலங்களில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியிலிருந்து, கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டுவதற்கான செயல்பாடுகளில் தோழர்களோடு இணைந்து தீவிரமாகச் செயல்பட்டார். சோசலிசச் சரித்திரம், சோசலிசத் தத்துவம் சார்ந்த மூல நூல்களை வாசித்த அனுபவம் சார்ந்து, தமிழில் அப்பொருண்மை குறித்து எழுதினார்.

காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி மற்றும் அதன் தொழிலாளர் பாதுகாப்புக் கழகம், சுயமரியாதை சமதர்மக்கட்சி ஆகியவற்றில் தலைமைப் பொறுப்பேற்க வேண்டிய சூழல் ஜீவாவிற்குக் கிட்டியது. “சுயமரியாதை என்ற சொல் எளிமையாகவும் தெளிவாகவும் இருப்பதைப் போல் தோன்றினாலும், அதன் ஆழத்தையும் அகலத்தையும் ஒரு வரையறைக்குள் அடக்கி விட இயலாது.”(க.வெங்கடேசன், (2019),ப.444 ) என்று சுயமரியாதை குறித்து எம்.கே. ரெட்டி கூறியுள்ளார்.

தந்தை பெரியாரோடு கருத்து முரண் ஏற்பட்ட சூழலில் தோழர்கள் அ. ராகவன், நீலாவதி, இராமநாதன் உள்ளிட்டவர்களுடன் இணைந்து ஜீவா ‘சுயமரியாதைச் சமதர்மக் கட்சி’ யை உருவாக்கினார். அக்காலங்களில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சியுடன் பெரியார் கொண்டிருந்த தொடர்பை, ஜீவா ஏற்றுக் கொள்ளவில்லை.

“1916-இல் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் உருவாக்கப்பட்டது. அதுவே பின்னர் நீதிக்கட்சி என்ற பெயருடன் செயல்பட்டது. நீதிக்கட்சி இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காமல் பிராமணர் அல்லாதார் நலன் காக்கும் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.” (க.வெங்கடேசன் (2019), ப.345 )எனவே ஜீவா அதற்கு எதிராகச் செயல்பட்டு காங்கிரஸ் தேர்தலில் வெற்றி பெற, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்காரராகச் செயல்பட்டார். இந்தப் பின்புலத்தில் பொதுவுடைமைக் கட்சியின் பெயரில் ஜனசக்தியை வார இதழாக வெளிக்கொண்டு வந்தது. 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

“அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்குப் பேதங்கள் அனைத்தையும் மறந்து கூட்டாக இருக்க வேண்டும்” (முரசொலி மாறன் (2017),ப.76 ). 1938-ல் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி உறுப்பினராக ஜீவா தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபைத் தேர்தலில் கலந்து கொள்வது என்று காங்கிரஸ் முடிவுசெய்தது. மந்திரி சபைகளை ஒப்புக்கொள்வதை ஜீவா ஏற்றுக்கொள்ளாதபோதிலும், காங்கிரஸின் தேர்தல் திட்டத்தை மக்களுக்கு விளக்கிப் பரப்புரை செய்வதில் தீவிரமாக ஈடுபட்டார். தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் ஜீவாவின் முழக்கம் எதிரொலித்தது.

**தொழிலாளர் விடுதலை**

காங்கிரஸ் தலைவர் என்றோ சோஷியலிஸ்டு தலைவர் என்றோ ஜீவாவை எல்லாரும் சொல்வதில்லை. ஜீவாவைத் தொழிலாளர் தலைவர் என்றே எல்லோரும் சொல்வார்கள். ஏனெனில் தொழிலாளி வர்க்கத்திற்காகத் தொடக்கத்திலிருந்து பாடுபட்ட ஜீவா, உழைப்பின் பெருமையையும் பசியின் கொடுமையையும் உணர்ந்திருந்தார். தொழிலாளர்களும் அவரைத் தங்களில் ஒருவராகவே கருதினார்கள்.

வர்க்க உணர்ச்சியை மறந்து முதலாளிகளைக் கண்டு நடுங்கி எப்படிப் போராடுவது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த, தமிழ்நாட்டுத் தொழிலாளி வர்க்கத்திற்கு உணர்ச்சியூட்டி, சங்கம் அமைத்துக் கொடுத்துப் போராடும் வழியையும் சொல்லிக் கொடுத்த தலைவர்களுள் ஒருவர் ஜீவா.

அச்சுத் தொழிலாளர், கள்ளிறக்கும் தொழிலாளர்கள் என்று அனைவருக்காகவும் குரல் கொடுத்ததால் தடியடியை எதிர்கொண்ட ஜீவா தனது வாழ்நாளில் பத்து ஆண்டுகளைச் சிறையில் கழித்தார். அங்கும் சிறைக்கைதிகளின் கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் இருந்தார். பி.அன்ட்.சி ஆலைத் தொழிலாளர்களுக்காகப் போராட்டம் நடத்திய போது, காவல்துறையினர் அதனைத் தடுக்க முயற்சித்துத் துப்பாக்கியை உயர்த்திச் சுடுவோம் என்று எச்சரித்த போது சுடு என்று பயமின்றி எதிர்கொண்டார்.

ஜீவா தன்னை ஒரு அரசியல்வாதியாக அடையாளப்படுத்திக் கொள்வதை விட, தொழிலாளர் தலைவராக அடையாளப்படுத்திக் கொள்வதையே விரும்பினார். ரயில்வே, அஞ்சலகத் துறைமுகத் தொழிலாளர் சங்கங்களின் வளர்ச்சியில் இவரது பங்கு அளப்பரியதாகும்.

என் வாழ்நாள் முழுவதும் இந்த பாட்டாளி மக்களுக்காகவே உழைத்தேன். என் இறுதி காலமும் அத்தகைய மனநிலையிலேயே கழிய வேண்டும். அவர்களிடமிருந்து என்னைத் தனித்துக் காட்டும் எந்த விஷயமும் எனக்குத் தேவை இல்லை என்று வாழ்ந்தார்.

பாமர மக்களின் இதயங் கவரும் சந்தங்களைக் கொண்டு, எளிய நடையில் இவர் இயற்றியுள்ள பாடல்கள் அந்நாளில் தேசிய மேடைகளிலும், தொழிற்சங்கக் கூட்டங்களிலும் பலரால் பாடப்பெற்றன."காலுக்குச் செருப்புமில்லை கால் வயிற்றுக் கூழுமில்லை என்ற பாடல், வீரர் ஜீவாவை உணர்ச்சிமிக்க கவிஞராக உலகுக்கு அறிமுகப்படுத்தியது." (ம.பொ.சிவஞானம், (1997),ப.310 )

இவரின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. இவர் சிறந்த தலைவனாக, எளிமையாகவும் இறுதி வரை நேர்மையாகவும் தன் பொதுவாழ்வினை அமைத்துக் கொண்டார்.

**இலக்கியக் கொடைகள்**

தமிழ் மொழிக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் தன் வாழ்க்கையையே தியாகம் செய்தவர் ஜீவா. சிறுவயதிலேயே காந்தியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட ஜீவா,ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போதே கவிதைகளும், நாடகங்களும்

எழுதி நடிக்கவும் செய்தார். தமிழ் இலக்கியம் மீது தனி ஆர்வம் கொண்டிருந்தார். பெரும் இலக்கியவாதியாகவும் திகழ்ந்தார்.

“ஐந்தாவது பாரத்தில் படிக்கும் போது எண்பது வெண்பாக்களை அவர் இயற்றினார். கதர் வெண்பா நாற்பது, இராட்டின வெண்பா நாற்பது.” (எஸ்.இஸ்மத்பாஷா (1946), ப.8 )

ஜீவாவின் ஆசிரியர் அவற்றைப் படித்துப் பார்த்த போது வியப்புக்குறியே அவரது கண்களில் தோன்றியது. ஒரே வெண்பாவில் மட்டும் ஒரு தளை தட்டுகின்றது. மற்ற அனைத்தும் சரியாக இருக்கின்றன. கருத்துகள்,அபூர்வமாக அமைந்திருக்கின்றன என்று சொல்லித் தட்டிக் கொடுத்தார். இந்த வார்த்தைகள் ஜீவாவின் உள்ளத்தில் மிகுந்த உற்சாகத்தை உண்டு பண்ணின.

இலக்கியத்தின் பால் தீராத தாகம் கொண்ட ஜீவா, தனது இறுதிகாலத்தில் கலை இலக்கிய பெருமன்றத்தைத் தொடங்கினார். ஜீவாவிற்குச் சங்க இலக்கியமும் தெரியும். சமய இலக்கியமும் தொரியும். சமகால இலக்கியமும் தெரியும். உள்ளூர் தொடங்கி உலகம் வலை எழுந்த இலக்கியங்கள் அனைத்தையும் ஆழ்ந்து உள்வாங்கி அவற்றுள் ஆழ்ந்திருக்கும். கவியுளம் கண்டு தம் எழுத்திலும் பேச்சிலும் எடுத்துக்காட்டிய இலக்கிய பேரரசன். அவரது ஆற்றல் சார் படைப்பின் ஊற்றுக்கண் கவிதை தான். பலருக்கும் அதுதான் ஆற்றல் தரும் வேதம் எனலாம்

**தொகுப்புரை**

உடல் நலம் குன்றிய நிலையில் ஜீவா 1963ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் நாள் இயற்கை எய்தினார். ஜீவாவின் பொன்னுடலுக்கு ஆட்சிப் பாகுபாடு இன்றி அனைத்துத் தலைவர்களும், பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர். பின்னாளில் மத்திய அரசு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பு செய்தது.

தன் வாழ்க்கையைத் தமிழுக்காகவும் தமிழருக்காகவும் தியாகம் செய்த ஜீவாவால் ஒரு முறை மட்டுமே தமிழக சட்டமன்றத்துக்குள் நுழைய முடிந்தது. பிறந்தோம் இறந்தோம் என்பதல்ல வாழ்க்கை. அநீதிக்கு எதிரான போராட்டத்தில் உயிரைத் துச்சமென மதித்துக் கலகக்குரல் எழுப்பிய ஜீவா மரணத்தை வென்று காட்டியவர்.

தமிழகத்தில் பாட்டாளி மக்கள் இருக்கும் வரை ஜீவாவின் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும். இந்திய விடுதலை வரலாற்றில் தோழர் ஜீவா தன் கொள்கைகளாலும் செயல்பாடுகளாலும் போராட்டக் குணங்களாலும் தவிர்க்க இயலாத இடத்தைப் பெற்றுள்ளார் எனில் மிகையில்லை.

**துணை நின்ற நூல்கள்**


1. இஸ்தம் பாஷா, ஜீவானந்தம் வாழ்க்கை, வரலாறு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, சென்னை, முதற்பதிப்பு, 1946.
2. சிவஞானம். ம.பொ., விடுதலைப் போரில் தமிழ் வளர்த்த வரலாறு, பூங்கொடி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு,1997.
3. சுப்புராசு, பாரதியார் கவிதைகள், சுரா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2016.
4. மணி,இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், முதல் பதிப்பு, 2002.
5. முரசொலி மாறன், மாநில சுயாட்சி, சூரியன் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2017.
6. மௌனகுரு, பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும், அலைகள் வெளியீட்டகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2006.
7. வீரமணி (தொகு) பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு- 1994.
8. வெங்கடேசன், தமிழ்நாடு வரலாறும் பண்பாடும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2019.
9. வேங்கடராஜீலு (மொ.பெ.), மகாத்மா காந்தியின் சுயசரிதை, காந்தி இலக்கியச்சங்கம், மதுரை, முதல் பதிப்பு, 1994.